# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## <u>OS.No.8/2024</u>

PW1–வேலுசாமி நாள்.02.04.2026

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் தாக்கல் செய்த காசோலை மோசடி வழக்கில் காசோலையின் தேதி 11.01.2021 என்றால் சரியல்ல. காசோலையின் தேதி 25.08.2022 ஆகும். நான் அந்த காசோலை வழக்கில் 12.11.2024ம் தேதி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தேதி ஞாபகமில்லை. காசோலை வழக்கில் குறுக்கு விசாரணையின் போது எதிரியிடம் 11.01.2021ம் தேதி பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வெளிநாடு சென்று பணம் சம்பாதித்தேன் என்பதை காட்ட கடவுசீட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காசோலைக்கு பின்பு தான் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட 27.04.2022 தேதியிட்ட புரோநோட் எழுதிகொடுத்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் உடன்பிறந்தவர் பெயர் ராஜகோபால் என்று தெரியும். அவர் அம்மா பெயர் தெரியாது. மேற்படி ராஜகோபாலுக்கு எதிராக அவர் ரூ.5லட்சம் கடன்வாங்கியதாக சார்புநீதிமன்றத்தில் மு.வ.எண்.63/2024ல் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாவா கடனுக்கு முன்பு பிரதிவாதிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததாக பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எதிர்வழக்குரையில் தாவா புரோநோட்டில் உள்ள அவருடைய கையெழுத்து மற்றும் கைரேகை இல்லையென்று அவர் மறுத்துள்ள விவரம் எனக்கு தெரியும். அவருடைய கையெழுத்து மற்றும் கைரேகையை நிபுணருக்கு அனுப்ப நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் சாட்சி கையெழுத்து செய்துள்ள சுப்பையா பாலையூரை சேர்ந்தவர். மற்றொருவர் லோகநாதன் பவித்திரத்தை சேர்ந்தவர். அவர்கள் இருவரும் என்னுடைய நண்பர்கள் இல்லை. அவர்கள் வேறு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால்

சுப்பையா பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்தவர். லோகநாதன் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர். புரோநோட்டை எழுதியது நெய்குப்பையை சேர்ந்த பொன்னுசாமி ஆவார். புரோநோட்டில் கண்ட தொகையை அந்த தேதியில் நான் கையில் வைத்திருந்தேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. கையில் வைத்திருந்தேன். நான் கடைசியாக 2020ம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிநாட்டில் இருந்து இந்தியா திரும்பினேன். வெளிநாட்டில் இருந்து வந்த பின்னர் நான் விவசாயம் செய்கிறேன். தாவா புரோநோட் பெரம்பலூரில் உள்ள என்னுடைய வீட்டில் வைத்து எழுதப்பட்டது. சாட்சி லோகநாதன் அப்போது என்னுடைய வீட்டில் கட்டுமான வேலை செய்துகொண்டிருந்தார். சுப்பையா பொன்னுசாமியுடன் வந்தார். அதற்கு முன்பு சுப்பையாவை எனக்கு தெரியும். பொன்னுசாமி தான் சுப்பையாவை சாட்சி கையெழுத்து போட சொன்னாரா என்றால் பிரதிவாதி தான் போடசொன்னார். பிரதிவாதிக்கு சுப்பையாவை தெரியுமா என்று எனக்கு தெரியாது. 27.04.2022க்கு முன்பாக பணம்வேண்டும் என்று பிரதிவாதி என்னிடம் கேட்டுள்ளார். சாட்சி பணம் வாங்கியுள்ளார் என்று கூறுகிறார். காசோலையில் சம்மந்தப்பட்ட பணத்தை முன்பு வாங்கியுள்ளார். ஏற்கனவே காசோலை மூலம் ரூ.30லட்சம் கடன் கொடுத்ததாக நான் கூறும் நிலையில் அதன்பின்னர் ஒரு வருடம் கழித்து மேற்கொண்டு ரூ.10லட்சம் தாவா கடனை கொடுப்பதற்கு காரணம் என்னவென்றால் தொழிலுக்கு சிரமம் இருப்பதாகவும், கட்டிடம் மற்றும் நிலம் உள்ளது அதை விற்று உங்களுக்கு செட்டில்செய்கிறேன் என்று சொன்னதால் கொடுத்தேன். தாவா புரோநோட்டை பூர்த்தி செய்யும் போது நான் உடன்இருந்தேன். அதை எழுதியது, கையெழுத்து செய்தது, சாட்சி கையெழுத்து போட்டது அனைத்து ஒரே பேனவால் எழுதப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி எந்த பேனவால் கையெழுத்து செய்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டார். புரோநோட்டில் உள்ள ரேகை பிரதிவாதியுடையது என்று எழுதப்படவில்லை. தாவா புரோநோட்டில் எனக்கு வேண்டியவர்கள் உதவியுடன் காசோலையில் உள்ள பிரதிவாதியின்

கையெழுத்தை பார்த்து தாவா புரோநோட்டில் பிரதிவாதியின் கையெழுத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன தேதியில் பிரதிவாதிக்கு ரூ.10லட்சம் நான் கடன்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் எனக்கு ரூ.10லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்று எனக்கு ஞாபகமில்லை. நானும், என்னுடைய மகன்களும் ஒன்றாக தான் இருக்கிறோம். நான் தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு எதுவும் அனுப்பாததில் இருந்தும் மற்றும் தாவா புரோநோட்டை கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பாதததில் இருந்தே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தவறானது என்று தெரியவரும் என்றால் சரியல்ல. பிராதில் கண்ட தொகையை பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றும், என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.